# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - பிப்ரவரி 28, 2026

Weekly E-paper • February 28, 2026



# ஓபிஎஸ் வருகை
## உருவாகும் புதிய அரசியல்!

சுப. வீரபாண்டியன்

**திராவிடக் களஞ்சியம் வரலாற்றின் பேராவணம்!**

வெற்றிச்செல்வன்

**இரண்டு மாதங்கள்தான்..!**

தலையங்கம்

**ஏழைகளுக்கும் எட்டும் தூரத்தில் ஐ.ஐ.டி! கழக அரசின் புதிய சரித்திரம்!**

நெல்லை பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - பிப்ரவரி 28, 2026 Weekly E-paper ● February 28, 2026


# ஒபிஎஸ் வருகை
## உருவாகும் புதிய அரசியல்!

**சுப. வீரபாண்டியன்**

தேர்தல் நேரத்தில் புதிய புதிய கூட்டணிகள் உருவாகும் ! பழையன சில கலையும்! சிலர் ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்கு மாறுவார்கள். இவையெல்லாம் இயல்பாக நடக்கக்கூடியன !

ஆனால், முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் ஒபிஎஸ் அவர்கள் திமுகவில் ஓர் உறுப்பினராகத் தன்னை இப்போது இணைத்துக் கொண்டிருப்பதை, இந்த வரிசையில் வைத்து நாம் பார்க்க முடியாது, பார்க்கக்கூடாது! இது இன்னொரு அரசியலின் தொடக்கம்!



திமுகவை சேர்ந்தவர்களே கூட, அதிமுக என்று ஒரு கட்சி எதிர் வரிசையில் இருக்க வேண்டும் என்று விரும்புவதுண்டு. அது அதிமுகவின் மீது கொண்ட பாசத்தினால் அன்று, திரும்பத் திரும்ப நம் கொள்கை எதிரிகள், இரண்டு திராவிடக் கட்சிகள் என்று சொல்லிக்கொண்டிருப்பது கவனத்திற்குரியது! ஆளுங்கட்சியாக ஒரு திராவிடக் கட்சியும், எதிர்க்கட்சியாக இன்னொரு திராவிட கட்சியுமே இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் திமுகவிலேயே உண்டு! பொது எதிரிக்கு நாம் இடம் கொடுத்து விடக்கூடாது என்பதற்காகவே அந்த விருப்பம்!

ஆனால் இப்போது நிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன! பாஜக, அதிமுகவை அரவணைத்து அழித்து விட வேண்டும் என்பதில் உறுதியாய் இருக்கிறது. எடப்பாடியும், கட்சி எக்கேடு கெட்டால் என்ன, தான் மட்டும் பிழைத்தால் போதும் என்னும் எண்ணத்திற்கு வந்து விட்டார்!

அதிமுகவை அழித்துவிட்டால், அக்கட்சியில் உள்ள அனைவரும் தங்களிடம் வந்து விடுவார்கள் என்பது அமித்ஷாவின் கணக்கு! ஆனால் அதிமுகவிற்கு ஆபத்து வரும்போது, அங்கே உள்ளவர்களில் மிக மிகக் குறைவானவர்கள் மட்டுமே பாஜக பக்கம் நகர்வார்கள்! பெரியார் அண்ணா மீது பற்றுள்ள பெரும்பான்மைக் கட்சிக்காரர்கள், தங்கள் தாய்க் கழகத்திற்கு வந்து விடுவார்கள்!

ஒபிஎஸ் அவர்களின் வருகையை அப்படித்தான் பார்க்க வேண்டும்! இது புதிய அரசியலின் தொடக்கம்!


ஒன்றை நாம் முடிவு செய்து கொள்ளலாம். உண்மையான எதிரியைக் களத்தில் சந்திக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது! எதிரி மாதிரித் தோற்றம் தரும் ஒருவரோடு எத்தனை காலம்தான் சண்டை போட்டுக் கொண்டிருப்பது?

எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் அரசியலில் நம் முன்னால் வந்து நிற்கப் போகிற வினா ஒன்றே ஒன்றுதான் -

காவியா, கருப்பா ? நீங்கள் எந்தப் பக்கம் ? ●

## பெருஞ்செல்வம் கட்சி ஒன்றே!

உண்மையாய் நேர்மையாய் உலகினில் வாழ்பவர் உண்டு!
உண்மையும் நேர்மையுமே உருப்பெற்று மனிதனாக
கண்முன்னே வாழ்ந்த காட்சி கண்டோம் நாம் நேற்று வரை!
இன்றுநாம் இழந்துவிட்டோம்!
எளிமையே இயல்பாய்க் கொண்ட
அய்யாநம் நல்லகண்ணு
அறப்போரை முடித்துக் கொண்டார்!
பொய்யில்லை அவரின் வாழ்வும்
பொதுவுடைமை
மறுவடிவம்தான்!
சிறை கண்டார் சிறைவாசத்தில்
சித்திரவதையும் கண்டார்
எது கண்டும் அஞ்சவில்லை
எதற்கும் அவர் மயங்கவில்லை!
ஒரு நூற்றாண்டுப் போரை
ஒரு வழியாய் முடித்துக் கொண்டார்!
பெருவாழ்வு அவரின் வாழ்வு !
பெற்ற செல்வம் கட்சி ஒன்றே!
வெறுப்பாரே இன்றி வாழ்ந்த
வியத்தகு அருமைத் தோழர்!
இருப்பார் அம் மாமனிதர்
என்றும் நம் நினைவில் வாழ்வார்!!



–சுபவீ

# திராவிடக் களஞ்சியம் வரலாற்றின் பேராவணம்!

## வெற்றிச்செல்வன்

கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில், திராவிட இயக்கமானது தமிழ்நாட்டில் ஏற்படுத்திய மாற்றம் அளப்பரியது. சடங்குகளாலும், மூட நம்பிக்கைகளாலும், பிற்போக்குத்தனங்களாலும் கெட்டிப்பட்டுப் போயிருந்த ஒரு சமூகத்தைப் புரட்டிப் போட்ட இயக்கம், திராவிட இயக்கம். இந்த மாற்றங்களையும், மாற்றத்திற்கான காரணிகளையும் ஆவணப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு அரசே ஈடுபட்டு இப்பணியை வெற்றிகரமாகச் சாத்தியப்படுத்தியிருக்கிறது. தமிழ் வளர்ச்சித் துறையின் 2021-22 மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ் வளர்ச்சித் துறையுடன் இணைந்து திராவிட இயக்க சிந்தனையாளர்களின் ஆக்கங்களை, திராவிடக் களஞ்சியத் தொகுப்பு நூல்களாக வெளியிடும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு இப்போது செயல்வடிவம் பெற்றுள்ளது.

நீதிக்கட்சி வரலாறு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் சிந்தனைகள், திராவிட இயக்கத்தினால் விளைந்த சமூக, பண்பாட்டு, பொருளாதார மாற்றங்கள், திராவிட இயக்கப் பெண் சிந்தனையாளர்களின் சிந்தனைகள், திராவிட இயக்கச் சிறுகதைகள், கவிதைகள் ஆகிய ஏழு பெருந்தொகுப்புகள் திராவிடக் களஞ்சியங்களாகக் கடந்த 18.02.2026 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஏழு தொகுப்புகளுக்கும் முறையே திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு, தோழர் புனித பாண்டியன், ஆய்வாளர் வீ. எம். எஸ். சுபகுணராஜன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், பேராசிரியர் எஸ். ஆனந்தி, பேராசிரியர் ந. இளங்கோ, பேராசிரியர் ஜெ.ஹாஜாகனி ஆகியோர் பதிப்பாசிரியர்கள் ஆவர். இத்தொகுதிகளுக்குப் பொதுப்பதிப்பாசிரியர் பாடநூல் கழக ஆலோசகர் தோழர் மூ. அப்பணசாமி ஆவார்.

திராவிட இயக்கத்திற்கு முன்னோடியாக இருந்த நீதிக்கட்சியின் வரலாற்றினைத் தொகுப்பதற்கு ஆய்வாளர் திருநாவுக்கரசு அவர்களைவிடப் பொருத்தமான நபர் இருக்க முடியாது. சான்றாவணங்களோடு வெளிவந்துள்ளது இத்தொகுப்பு. பெரியாரின் சிந்தனைகளைப் பொறுத்தமட்டில், அவருடைய கடவுள்/மத மறுப்புச் சிந்தனைகளில் இருந்து அவருடைய பல்வேறு பரிமாணங்களைப் புரிந்து கொள்ளும் வகையில், அனைத்துத் தலைப்புகளையும் உள்ளடக்கிய சிந்தனைத் திரட்டாக இருக்கிறது. அண்ணாவின் தொகுப்பும் அவ்வாறே. அறிஞர் அண்ணாவைப் பொறுத்த அளவில், அவருடைய மாநில சுயாட்சி குறித்த பார்வையைத் தாண்டி, மதச்சார்பின்மை, பொருளாதாரம், இந்துமத மறுப்பு என்று பரவலாகாத சிந்தனைகள் பல தொகுக்கப்பட்டுள்ளது, இத்திரட்டின் சிறப்பு. சமூக, பண்பாட்டு, பொருளாதார மாற்றங்கள் திரட்டில் ராபர்ட் ஹார்ட்கிரேவ் தொடங்கி பல்வேறு துறைகளைச் சேர்ந்த




பலதரப்பட்ட எழுத்தாளர்களின் கட்டுரைகள் அடங்கிய அணிவகுப்பாக இத்தொகுப்பு மிளிர்கிறது. சில ஆங்கிலக் கட்டுரைகளும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது கூடுதல் சிறப்பு.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரையில் பெரிய அளவில் கொண்டு சேர்க்கப்படாத வரலாறு, திராவிட இயக்கப் பெண்களின் வரலாறு. முனைவர் வளர்மதி, தோழர் ஓவியா, தோழர் ஜீவசுந்தரி, வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோரின் பங்களிப்பு இத்துறையில் குறிப்பிடத்தக்கது. 720 பக்கங்களைக் கொண்ட இத்திரட்டில், பெண் சிந்தனையாளர்களின் பேச்சும்,

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## இரண்டு மாதங்கள்தான்..!

உலகம் சுற்றும் வாலிபனாக மாறிவிட்ட மோடி அவர்கள் மார்ச் 1ஆம் தேதி மதுரை வருகிறார் என்று சொல்கிறார்கள்.

எதற்கு...? பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொள்ள. என்ன பிரச்சாரம்...? தேர்தல் பிரச்சாரம். எப்படி பிரச்சாரம் செய்வார்...?

ஒன்றிய கல்வித்திட்டத்தை தமிழ்நாடு ஏற்காமல் இந்தியைப் புறக்கணிக்கும்வரை தமிழ் நாட்டிற்குக் கல்விக்கான நிதியைத் தரமாட்டோம்.

இந்தி மொழியைத் திணிக்காமல் விடமாட்டோம். கீழடி ஆய்வுகளை எங்களுக்குச் சாதகமாக மாற்றிச் சொல்லாவிட்டால், அதை ஏற்கமாட்டோம்.

எய்ம்ஸ் மருத்துவமனையை மதுரையில் திறப்பதாகச் சொல்வோம், செய்ய மாட்டோம். மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களை நிறைவேற்ற மாட்டோம்.

மாநில ஆட்சி என்று நீங்கள் கேட்கக்கூடாது. அந்த வேலையைத்தான் கவர்னர் ரவி பார்த்துக்கொண்டு இருக்கிறாரே!

இதைப்பார்த்தாவது, புரிந்துகொண்டு பெரியார், பெரியார் மண் என்றெல்லாம் பேசாமல் எங்களுக்கு வாக்களிக்க வேண்டும். பாரத் மாத்தாகீ ஜே !

இப்படிஉண்மையைப்பேசிப்பிரதமர்பிரச்சாரம் செய்வாரா? என்று கேட்கத் தோன்றுகிறது.

அவர் திருக்குறள் சொல்லி, தமிழ் படிக்க முடியவில்லையே என்று எப்படித்தான் உருகி உருகிப் பேசினாலும் தமிழர்களிடம் அவரின் 'பாச்சா' பலிக்காது.

சமத்துவமற்ற, மதவாத, எதேச்சதிகார, சர்வாதிகார ஆட்சியைத் தமிழர்கள் ஏற்கமாட்டார்கள்.

ஏன் தெரியுமா? எங்கள் தந்தை பெரியார் மறையவில்லை, வாழ்ந்து கொண்டு இருக்கிறார், தமிழர் நெஞ்சங்களில்.

அதனால்,தலைவர்ஸ்டாலின்சொன்னதுபோல இன்னும் இரண்டு மாதங்களில், வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் பாஜகவைத் துடைத்து எறியப் போகிறார்கள், தமிழர்கள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

எழுத்தும் தொகுக்கப்பட்டுள்ளது. "நாங்கள் வைக்கும் நெருப்பு அநேக காலம் புகைந்து கொண்டே இருக்கும்" என்ற தலைப்பிலான பதிப்பாசிரியர் உரை செறிவானது.

திராவிட இயக்க இலக்கியங்களை வெறும் பிரச்சார இலக்கியமாகச் சுருக்கிப் பார்க்கும் குறுகிய பார்வை கொண்டவர்கள் படிக்க வேண்டிய தொகுப்புகள். திராவிட இயக்கச் சிறுகதைகளும், கவிதைகளும். கலை கலைக்காக மட்டும் அல்ல, கலை வாழ்க்கைக்காகவும்தான் என்ற கோட்பாட்டைக் கொண்டது திராவிட இயக்கம். அவ்வகையில் சிறுகதை, கவிதை போன்ற இலக்கிய வடிவங்களை, தமிழ் இன, மொழி மீட்பு, பகுத்தறிவு, மாநில உரிமை, ஆதிக்க எதிர்ப்பு போன்ற பல்வேறு பொருண்மைகளை உள்ளடக்கிய இலக்கியமாகப் படைத்தளித்தது திராவிட இயக்கம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தொடங்கி அண்மையில் மறைந்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் வரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் தொடங்கி முத்தமிழறிஞர் கலைஞர், ஆசைத்தம்பி, தென்னரசு, முரசொலி மாறன் உள்ளிட்ட பலரின் சிறுகதைகள் இந்த இரண்டு தொகுப்புகளிலும் இடம்பெற்றுள்ளன.

இந்தஏழுதொகுப்புகளும்மொத்தம் 4,740 பக்கங்களைக் கொண்டவை. ஆவணக் காப்பகங்கள், நூலகங்கள், தனிநபர்களின் சேகரிப்புகள் என்று பலதரப்பட்ட இடங்களில் இருந்து இத்தொகுப்பிற்கான உள்ளடக்கம் சேகரிக்கப்பட்டுள்லது. இக்களஞ்சியங்களைத் தொகுப்பதில் தொகுப்பாளர்களாகப் பணியாற்றிய திராவிடப் பள்ளி இணை ஒருங்கிணைப்பாளர் தோழர் வெற்றிச்செல்வன், தோழர்கள் ராஜா, முருகன், அஜித் ஆகியோரின் உழைப்பு பாராட்டுவதற்கு உரியது. மேற்காணும் திரட்டுகளின் வரிசையில் மேலும் சில தொகுப்புகளும் வெளிவரவுள்ளன. இவை ஆங்கிலத்திலும், இந்தியாவின் பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படும்போது, திராவிட இயக்கச் சிந்தனைகள் உலகெங்கும் பரவிடுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். இம்முயற்சி திராவிட மாடல் அரசின் 2.0 -வில் தொடருமாயின் அது வரவேற்கத்தக்கதே.

நூல்கள் கிடைக்குமிடம்: தமிழ்நாடு பாடநூல் கழகம், நுங்கம்பாக்கம், சென்னை. ●

# ஏழைகளுக்கும் எட்டும் தூரத்தில் ஐ.ஐ.டி! கழக அரசின் புதிய சரித்திரம்!

**நெல்லை பாபு**

"கல்வி என்பது ஒரு சலுகையல்ல, அது ஒவ்வொரு குழந்தையின் உரிமை." இந்த உரிமையை நிலைநாட்டவும், சமூகத்தின் விளிம்புநிலையில் உள்ள மக்களுக்கும் தரமான உயர்கல்வி சென்றடைய வேண்டும் என்பதே திராவிட மாடலின் அடிப்படை நோக்கம். "எல்லோருக்கும் எல்லாம்" என்பது வெற்று முழக்கமல்ல;

அது சமூகநீதிக்கான சங்கநாதம் என்பதை இன்று தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்களின் கண்களில் மின்னும் அறிவுச்சுடரின் மூலம் நிரூபித்திருக்கிறது திராவிட மாடல் அரசு. பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கும், பெரும் நகரங்களில் வசிக்கும் மாணவர்களுக்கும் மட்டுமே எட்டும் கனவாக இருந்த ஐ.ஐ.டி (IIT) போன்ற தேசிய நிறுவனங்களின் கதவுகள், இன்று தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் உள்ள எளிய வீட்டுப் பிள்ளைகளுக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளன என்றால், அது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற தலைவனின் தொலைநோக்குப் பார்வையால்.

2026-ஆம் ஆண்டுக்கான J.E.E (Session-1) தேர்வு முடிவுகள், தமிழகப் பள்ளிக் கல்வித்துறை வரலாற்றில் ஒரு பொற்காலத்தைப் பதிவு செய்துள்ளன. இத்தேர்வில்,தமிழ்நாட்டைச் சேர்ந்த 448 அரசுப் பள்ளி மற்றும் மாதிரிப் பள்ளி மாணவர்கள் தேர்ச்சி பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இந்த எண்கள் வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல; இவை சமூக மாற்றத்திற்கான சாட்சிகள். குறிப்பாக:




பல மாணவர்கள் 99 விழுக்காட்டிற்கும் (99 Percentile) அதிகமான மதிப்பெண்களைப் பெற்று தேசிய அளவில் வியப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் 95 விழுக்காட்டிற்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் எளிய விவசாயக் குடும்பங்களையும், அன்றாடக் கூலித் தொழிலாளர்களின் குடும்பங்களையும் சேர்ந்தவர்கள் என்பதுதான் இந்தச் சாதனையின் மகுடம். இந்த வெற்றி ஏதோ தற்செயலாக நிகழ்ந்ததல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் உருவாக்கப்பட்ட 'மாதிரிப் பள்ளிகள்' (Model Schools) திட்டத்தின் விளைவேயாகும்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் திறமையான மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு:

1. உயர்தரப் பயிற்சி: ஐ.ஐ.டி மற்றும் என்.ஐ.டி போன்ற நிறுவனங்களில் பயின்ற நிபுணர்களைக் கொண்டு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
2. தங்கும் வசதி: மாணவர்களின் குடும்பச் சூழல் கல்வியைப் பாதிக்காத வண்ணம், தங்கும் வசதியுடன் கூடிய உண்டு உறைவிடப் பள்ளிகளாக இவை செயல்படுகின்றன.
3. நவீன தொழில்நுட்பம்: கணினி ஆய்வகங்கள் மற்றும் டிஜிட்டல் கற்றல் முறைகள் மூலம் தேசிய அளவிலான போட்டிகளுக்கு மாணவர்கள் தயார் செய்யப்படுகின்றனர்.

"கல்வி ஒன்றே யாராலும் பறிக்க முடியாத சொத்து" என்ற சிந்தனையோடு கல்விப் புரட்சியை முன்னெடுத்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

"பணம் இல்லை என்பதற்காக ஒரு மாணவனின் கல்வி கனவு கலைந்துவிடக் கூடாது"

என்ற உறுதியுடன், இந்த 448 மாணவர்களின் உயர்கல்விக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கும் என்று அறிவித்திருப்பது, 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் ஈடு இணையற்ற சாதனையாகும்.

முன்பெல்லாம், "நமக்கு ஏன் ஐ.ஐ.டி? அதெல்லாம் வசதி படைத்தவர்களுக்கானது" என்று ஒதுங்கியிருந்த மாணவர்களின் மனங்களில், "உன்னாலும் முடியும், நீயும் உலகைத் தலைமை தாங்கலாம்" என்ற தன்னம்பிக்கையை இந்த அரசு விதைத்துள்ளது. சாதி, மதம், வறுமை என அனைத்துத் தடைகளையும் உடைத்து எறிந்து, கல்வியால் ஒரு சமத்துவ சமூகத்தைப் படைப்பதே இத்திட்டத்தின் லட்சியம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் என்ற முதல்வரின் உறுதிமொழி, இன்று இந்த மாணவர்களின் வெற்றியில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த 448 மாணவர்கள் வெறும் பொறியாளர்களாக மட்டும் உருவாகப் போவதில்லை; அவர்கள் சமூக மாற்றத்தின் தூதுவர்களாகத் திகழ்வார்கள். இது ஒரு தேர்வு முடிவல்ல; இது சமூக நீதிக் கோட்டையின் அடித்தளம் இன்னும் வலுப்பெறுவதன் அடையாளம். திராவிட மாடல் ஆட்சியின் கீழ், தமிழ்நாடு கல்வித் துறையில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. ஸ்டாலின் தொடரட்டும்.... தமிழ்நாடு வெல்லட்டும்!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian